**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED PROJECTS OF 1) M/S. DHAVAMANI JAYARAMAN ROUGH STONE QUARRY AT S.F. NO: 916/4A, 8 & 918/1, 2, 3, 4, OVER AN EXTENT OF 6.65.00 HA 2) M/S. P. JEYARAMAN ROUGH STONE QUARRY AT S.F. NO: 913(P), 914, 915/2, 916/3A, 916/3B, 916/5 & 917/2, OVER AN EXTENT OF 4.97.50 HA LOCATED AT NATHIKUDI VILLAGE, VEMBAKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 10.06.2025, 11.00 AM AT M/S.LORD P.C ARUNACHALANADAR AVUDAITHAYAMMAL THIRUMANA MANDAPAM, DOOR NO. 1210, POOLAVURANI VILLAGE, SIVAKASI TO VILAMPATTI ROAD (POOLAVURANI BUS STOP), SIVAKASI TALUK, VIRUDHUNAGAR DISTRICT**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru. M.Sivakumar | : | Revenue Divisional Officer<br>Sattur,<br>Virudhunagar District. |
| 2 | Er.J. Hamoneth Joesun | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar District. |
| 3 | Tmt. N.Kalaivani | : | Thasildar,<br>Vembakottai Taluk.<br>Virudhunagar District. |
| 4 | Er.V. Kalaijothi | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar District. |
| | As per Attendance Register | : | Public, Project proponent 82 Nos<br>(List enclosed) |

The public hearing was held on 10.06.2025 at 11.00AM at **M/s.Lord P.C Arunachalanadar Avudaithayammal Thirumana Mandapam, Door No. 1210, Poolavurani Village, Sivakasi to Vilampatti Road (Poolavurani Bus Stop), Sivakasi Taluk, Virudhunagar District** under EIA Notifications, 2006 for the Quarry proposal of M/s. Dhavamani Jayaraman Rough stone quarry at S.F. No: 916/4A, 8 & 918/1, 2, 3, 4, over an Extent of 6.65.00 Ha and M/s. P. Jeyaraman Rough stone quarry at S.F. No: 913(P), 914,

915/2, 916/3A, 916/3B, 916/5 & 917/2, over an Extent of 4.97.50 Ha located at Nathikudi village, Vembakottai Taluk, Virudhunagar District. The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the Revenue Divisional Officer, Sattur, other government officials, all general public and project proponents who have attended the public hearing. He informed that the public notices informing the conduct of Public Hearing was published in "Dinakaran" and "The New Indian Express" on 07.05.2025. He also informed that wide publicity was given about the conduct of public hearing by circulating pamphlets in the nearby villages of the project site. Further, he stated that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification, 2006. Subsequently, the District Environmental Engineer stated that the project proponent will make a detailed presentation on the proposed project and requested the public to express their views after completion of the presentation. He added that the written statements would also be received.

Further he stated that the views, suggestions and queries of the public will be recorded through video graphy and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu.

The Revenue Divisional Officer, Sattur initiated the Public Hearing process. Subsequently, the District Environmental Engineer requested the project proponent to explain about their proposed project.

Then, the Environmental consultant of the project has made detailed presentation on the project of 1) M/s. Dhavamani Jayaraman Rough stone quarry, 2) M/s. P. Jeyaraman Rough stone quarry to the public along with Environmental Management Plan.

Further, the public has furnished their views with respect to the project as follows –

1. **Mr. Mayilvahanam, S/o. Shanmugam, Village Nattamai, Nathikudi**

He said that there is a Kanmoi named Sengulam kanmoi located at the southern side of the proposed quarry site and stated that the quarrying operation should not affect the water flow of the above kanmoi and the nearby agricultural lands. He also informed that the Sengulam kanmoi is the major water source for the surrounding villages. Hence, permission may be issued to the Quarry without affecting the nature of the Kanmoi.

2. **Mr. Muthusamy, S/o. Muthaiah, Nathikudi**

He informed that the Chengulam Kanmoi is situated between the villages surrounding namely Nathikudi, Subramaniapuram, Krishnapuram and Sivagamipuram, and the people there are doing their farming by relying on the water supply from that Kanmoi. He further stated that there were already 6 Numbers of water supply canals around this area, but now due to the increasing number of quarries, the above 6 Numbers of water supply canals are no longer available. Therefore, he informed that the people of Nathikudi and Subramaniapuram villages are using the water supply from this Chengulam Kanmoi by constructing deep bore wells. However, he informed that due to the insufficient rainfall, there is no water flow in the Chengulam Kanmoi and the quality of the water has also changed and he also stated his opinion in written statement and read it (A copy of the Written Petitions - 7 pages - Petition No.13 & 14 is enclosed vide Annexure). Therefore, he stated that permission should not be given to this quarry in Nathikudi village.

3. **Mr. R. Pandi, Nathikudi**

He said that this proposed quarry site is located 500 meters away from odai and 1.5 kilometers from residential areas and 300 meters from water bodies as per the Mines & Mineral Resources Act, and that this quarry will be established by following the Rules. He also stated that such quarries have been operating in Nathikudi village for more than 20 years and whether there was any impact at that time? (This caused a difference of opinion among the public). He also said that the social responsibility fund that comes from establishing of such projects will be utilized for developing road facilities and school facilities to the people. He also said that, the owner of this quarry has already done many welfare activities for this village and that the educated youth of the nearby villages have got employment opportunities due to this project. He questioned to the public why there was no opposition at the time, and said that public hearings were frequently conducted and licenses has been held and a license had been issued for the quarrying operation in Nathikudi village for the past 5 years for various quarry projects.

4. **Mr. Sonamuthu, S/o. Muthuramalingadevar, Nathikudi**

He said that the project would cause a lot of damages to nearby surrounding and huge noise generates from the already existing quarries due to blasting operations in the quarries and if we inform the owner regarding this noise nuisance. He said that we did not blast it and asked to enquire the nearby quarry. He also said that the blasting would cause a lot of noise and said that he had heard a lot of noise while sitting at a tea shop in

Alangulam village in the Evenings hours and that the noise level of the blasting in the quarry was higher than the noise level of a blast if happens in a fire crackers industry, hence the permission should not be given for this proposed quarry.

5. **Mr. Alagumalai, Subramaniyapuram.**

He suggested that permission be given to this project with an assurance not to affect the nearby water bodies. He also said that these quarries will provide job opportunity for the people of this village to work locally instead of going abroad and requested to grant permission to this quarry.

6. **Mr. Muthuramalingam, S/o. Sakthivel, Nathikudi**

Mr. Muthuramalingam has stated that there is already a water body in existing in S.F.No. 917/2 and quarrying has already done in S.F.No.of 918/2,3 and sand has already been extracted in S.F.No. 914/4A. He further stated that the owner of this quarry has already constructed a road of up to one kilometer for the passage of heavy vehicles for his own use. He further stated that he has already established a Bunker in S.F.No. 887 and has encroached an Odai located in S.F.No of 808/3. He also stated that a gravel quarry is already located in S.F.No of 915/2, but he stated his opinion that public hearing is being conducted for this survey number only now.

7. **Mr. Rajadurai, Advocate, Nathikudi**

He said the operation of such quarries are harmful to the Environment and the public also. And that after visiting the areas where such quarries are located, the road belongs only to the quarry owner and the drivers. He said that heavy vehicles are causing a lot of dust and that heavy vehicles carrying rough stone without proper safety measures and this is causes a lot of damage to the Environment. Therefore, he requested that rough stone be transported with proper safety measures and operated without polluting the environment. The Government should take action against those who violate this. He also said that quarries are using excessive amounts of explosives and extracting minerals beyond the licensed quantity. Hence, he requested that a survey be conducted in all the quarries that have already obtained permission and to ensure that the quantities of rough stone extracted by the quarries, adhere to the quantity approved by the Government.

**8. Mr. Balamurugan, Nathikudi**

He said that the blasting operations is being carried out at around 12 AM at night times in the quarries and would cause damage to his nearby house and therefore requested that permission not be given for the quarry.

**9. Mrs. Kanagalakshmi, W/o. Muthuramalinga, Nathikudi**

She said that if the advertisement / intimation regarding the conduct of Pubic Hearing for the establishment of this quarry was given a week in advance, many public would have come and requested that the meeting to be held at Nathikudi Panchayat. She also said that the loud blasting causes severe vibrations and cracks in the walls of nearby houses. She also said that children are affected and that the agricultural land is affected due to heavy dust. She said that since permission was already given to their quarry, the agricultural land was affected and it is currently not possible to cultivate it. Therefore, she said that permission should not be given to this quarry.

**10. Mr. Marimuthu, S/o. Chellaiah, Nathikudi**

He said that due to the operation of such projects/ quarries both the employees and the owner will benefited. But there should be a justice for it. He questioned whether the conduct of a public hearing in adjacent Taluk for a proposed quarry in his Taluk is appropriate? He said that if a public hearing was held in the concerned village, all the public would be able to express their views. Therefore, he requested that this public hearing be cancelled. He also requested that the power point presentation shall be in simple manner as like stories, so that the pubic will easily understand.

**11. Mr. Asokan, S/o. Alagarsamy, Kakkivadanpatti**

He said that due to the establishment / operation of such quarries, problem arises in using of the road and water bodies since 2013, and whether any actions have been taken to rectify it till date. He said that, he had submitted a petition to the Mines Department on 24.12.2023 and the reply received was not satisfactory, and further no steps have been taken to restore the encroached road in survey Nos. 845, 847 till date. However, he said that there was no objection to the establishment of this quarry to be and requested that the quarry to be established shall not disturb the path way leading to the nearby agricultural lands. He requested that the Mineral Resources Fund be used to make arrangements to pump the water in the well and fill it into the Chengulam Kanmoi.

**12. Mr. A. Narayanaperumalsamy, State Secretary of Quarry Association**

He said that this project is not proposed on Government land, but on own Patta land, so permission can be given, and that the authorities should resolve the road and water bodies problems. He also said that the country will be prosperous only if such quarries are commissioned, and requested permission to be given for this project.

After that, since no one came forward to give view on the project, the Revenue Divisional Officer, Sattur invited the public to offer their further more views if any. Even after that, no one came forward to give any opinion. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted and informed that the Minutes of the Meeting along with Compact Disc consisting the entire videographed Public Hearing will be forwarded to the SEIAA for further actions. He also thanked all and requested to furnish their views if any in written of petitions.

| | | |
|---|---|---|
| Total number of written petitions received | - | 54 |
| In Favour of the proposed quarry | - | 12 |
| Against the proposed quarry | - | 42 |

With this, the meeting came to the end.

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Virudhunagar

Revenue Divisional Officer
Sattur,
Virudhunagar District.

**Enclosures:**

1. Copy of Attendance Register (Total 08– pages, 82 persons)
2. Videograph of public hearing meeting (CD format)
3. Copy of Public Notices (both Tamil & English).

**விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், நதிக்குடி கிராமம், 1) புல எண்கள். 916/4A, 8 & 918/1, 2, 3, 4-ல் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். தவமணி ஜெயராமன் உடைகல் மற்றும் கிராவல் குவாரி மற்றும் 2) புல எண்கள். 913(P), 914, 915/2, 916/3A, 916/3B, 916/5 & 917/2-ல் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.பி. ஜெயராமன் உடைகல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பாக 10.06.2025 முற்பகல் 11.00 மணியளவில் தி/ள். லார்டு பி.சி. அருணாச்சலநாடார் ஆவுடைத்தாயம்மாள் திருமண மண்டபம், கதவு எண்.1210, பூலாவூரணி கிராமம், சிவகாசி - விளாம்பட்டி ரோடு, (பூலாவூரணி பேருந்து நிறுத்தம்) சிவகாசி தாலுகா, விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

**பங்கேற்றோர்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.மு.சிவக்குமார் | : | வருவாய் கோட்டாட்சியர்,<br>சாத்தூர்,<br>விருதுநகர் மாவட்டம். |
| 2 | பொறி. ஜே.ஹேமந்த் ஜோசன் | : | மாவட்டசுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடுமாசுகட்டுப்பாடுவாரியம்,<br>விருதுநகர் மாவட்டம். |
| 3 | திருமதி.ந.கலைவாணி | : | தாசில்தார்,<br>வெம்பக்கோட்டை. |
| 4 | பொறி.வே.கலைஜோதி | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர் மாவட்டம். |
| | வருகை பதிவேட்டின் படி | : | பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் 82 நபர்கள்<br>(பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், நதிக்குடி கிராமம், புல எண்கள். 916/4A, 8 & 918/1, 2, 3, 4-ல் மற்றும் புல எண்கள். 913(P), 914, 915/2, 916/3A, 916/3B, 916/5 & 917/2-ல் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.தவமணி ஜெயராமன் உடைகல் மற்றும் கிராவல் குவாரி மற்றும் தி/ள். பி. ஜெயராமன் உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக, பொதுமக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் தி/ள். லார்டு பி.சி. அருணாச்சலநாடார் ஆவுடைத்தாயம்மாள் திருமண மண்டபம், கதவு எண்.1210, பூலாவூரணி கிராமம், சிவகாசி - விளாம்பட்டி ரோடு, ( பூலாவூரணி

பேருந்து நிறுத்தம்) சிவகாசி தாலுகா, விருதுநகர் மாவட்டத்தில் 10.06.2025 முற்பகல் 11.00 மணியளவில் துவங்கியது. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர், ஏனைய அரசு அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து ஏற்கனவே "தினகரன்" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 07.05.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம், நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவாக விழிப்புணர்வு மற்றும் அறிவிப்பு செய்ததைக் கூறினார். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006-ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம் எனக் கேட்டுக்கொண்டார். எழுத்துப்பூர்வமாக கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் எனத் தெரியப்படுத்தினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்து கேட்புகூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் எனத் தெரிவித்தார்.

பிறகு, வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர் அவர்கள் பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தினை துவக்கி வைத்தார். பின்பு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தொழிற்திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலை பிரதிநிதியைக் கேட்டுக்கொண்டு, அதன்பின் பொதுமக்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

அதன் பின் தி/எ். தவமணி ஜெயராமன் உடைகல் மற்றும் கிராவல் குவாரி மற்றும்

தி/எ்.பி.ஜெயராமன் உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

1. **திரு. S. மயில்வாகனம், த/பெ. சண்முகம், நாட்டாமை, நதிக்குடி**

திரு.S.மயில்வாகனம் அவர்கள், இந்த குவாரி அமையும் இடத்திற்கு தெற்குபுறம் செங்குளம் கண்மாய் உள்ளதாகவும் அந்த கண்மாய் வரும் நீர் வரத்திற்கு பாதிப்பு இல்லாமலும் அருகில் உள்ள விவசாய நிலங்களுக்கு பாதிப்பு இல்லாமலும் இயக்க வேண்டும் என்று கூறினார். அருகில் உள்ள கிராமங்களுக்கு குடிநீரானது இந்த கண்மாயிலிருந்து தான் செல்வதாகவும் இதனால் நீர்வரத்தினை பாதிக்காத வண்ணம் இத்திட்டத்திற்கு அனுமதி வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

2. **திரு. முத்துச்சாமி, த/பெ. முத்தையா, நதிக்குடி ( முன்னாள் வார்டு கவுன்சிலர்)**

திரு. முத்துச்சாமி அவர்கள், நதிக்குடியை சுற்றியுள்ள கிராமங்களான சுப்பிரமணியபுரம், கிருஷ்ணாபுரம், சிவகாமிபுரம் ஆகிய ஊர்களுக்கிடையே செங்குளம் கண்மாய் அமைந்திருப்பதாகவும், அந்த கண்மாயின் நீர்வரத்தினை நம்பிதான் அங்குள்ள மக்கள் விவசாயம் செய்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும், இந்த பகுதியை சுற்றி 6 நீர்வரத்து கால்வாய்கள் ஏற்கனவே இருந்ததாகவும், தற்போது குவாரிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதால் மேலே கூறிய 6 நீர்வரத்து கால்வாய்களையும் காணவில்லை எனவும் கூறினார். ஆகவே, இந்த செங்குளம் கண்மாயிலிருந்து வரும் நீர்வரத்தினால் தான் ஆழ்துளை கிணறு அமைத்து நதிக்குடி மற்றும் சுப்பிரமணியபுரம் கிராம மக்கள் குடிநீரை உபயோகப்பதாகவும் தெரிவித்தார். இருந்தபோதிலும், தற்போது மழையின்மையினால் செங்குளம் கண்மாயிலும் நீர்வரத்து இல்லை என்றும் மேலும் நீரின் தரமும் மாறிவிட்டதாகவும் தெரிவித்தார் மற்றும் அவரது கருத்தினை எழுத்து பூர்வமாக தெரிவித்து அதனை வாசித்தும் காட்டினார் (அதன் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது (மனு எண். 13 மற்றும் 14 - 7 பக்கங்கள்). ஆகவே

இந்த குவாரி அமைவதற்கு நதிக்குடி கிராமத்தில் அனுமதி வழங்கவேண்டாம் என தெரிவித்தார்.

3. **திரு. ஆர். பாண்டி, நதிக்குடி**

திரு.ஆர். பாண்டி அவர்கள், இந்த திட்டமானது கனிமவள விதிப்படி முறையாக ஓடைகளிலிருந்து 500 மீட்டர் தூரமும் குடியிருப்பு பகுதிகளிலிருந்து 1.5 கிலோமீட்டர் தூரமும் நீர்வரத்து பகுதிகளிலிருந்து 300 மீட்டர் தூரமும் அமைந்திருப்பதாகவும், விதிகளை கடைபிடித்து இந்த குவாரியினை நிறுவ இருப்பதாகவும் சுற்றுச்சூழல் ஆலோசகர் தெரிவித்தாகவும் கூறினார். மேலும், 20 ஆண்டுகளுக்கு மேலாகவே இதுபோன்ற குவாரிகள் நதிக்குடி கிராமத்தில் நடைபெற்று வருவதாவும் அப்பொழுது எல்லாம் பாதிப்பு இல்லையா என வினவினாா? இவ்வாறு கூறுகையில் பொதுமக்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. மேலும், இவ்வாறு திட்டங்கள் அமைவதால்தான் வரும் சமூக பொறுப்பு நிதியின் (CSR Fund) மூலம் ஊர் பொதுமக்களுக்கு சாலை வசதி, பள்ளி வசதி செய்து தருவதாகவும் தெரிவித்தார். மேலும், இதுபோலவே இத்திட்டத்தின் உரிமையாளரும் ஏற்கனவே இந்த ஊருக்கு நிறைய நலத்திட்டங்கள் செய்துள்ளதாகவும் மற்றும் இத்திட்டத்தினால் அருகில் உள்ள கிராமங்களில் உள்ள படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார். கடந்த 5 வருடங்களாக நதிக்குடி கிராமத்தில் கல்குவாரி அமைப்பதற்கு கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்பட்டு உரிமம் வழங்கப்பட்டு வருவதாகவும், அப்பொழுது எல்லாம் ஏன் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என பொதுமக்களிடம் வினவினார்.

4. **திரு. சோனமுத்து, த/பெ. முத்துராமலிங்கதேவர், நதிக்குடி.**

திரு.சோனமுத்து அவர்கள், இத்திட்டத்தினால் அதிகமாக பாதிப்பு வருவதாகவும், அவரது வீட்டில் ஏற்கனவே வெடி வைப்பதால் அதிக சப்தம் கேட்டதாகவும், இதனை இந்த குவாரி உரிமையாளரிடம் தெரிவித்தபொழுது நாங்கள் வெடி வைக்கவில்லை, அருகிலுள்ள குவாரியிடம் கேளுங்கள் என கூறிவிட்டதாகவும் தெரிவித்தார். இவ்வாறு வெடி போடுவதால் அதிக சப்தம் வருவதாகவும், மேலும் மாலை நேரங்களில் ஆலங்குளம் கிராமத்தில் உள்ள டீ கடையில் அமர்ந்திருக்கும் பொழுது

அதிக அளவு சத்தத்துடன் கூடிய ஒலி கேட்டதாகவும், குவாரியில் வைக்கும் வெடியின் சத்தத்தின் அளவு ஒரு பயர் ஓர்க்ஸ் வெடிக்கும் சப்தத்தின் அளவை விட அதிகமாக இருப்பதாகவும் தெரிவித்து, இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கவேண்டாம் எனவும் தெரிவித்தார்.

5. <u>திரு. அழகுமலை, சுப்பிரமணியபுரம்</u>

திரு. அழகுமலை அவர்கள், அருகில் உள்ள கண்மாய்க்கு பாதிப்பு இல்லாமல் நீர் வரத்தினை பாதிக்காமல் இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கலாம் என தெரிவித்தார். மேலும், இந்த ஊர் மக்கள் வெளியூர் சென்று வேலை பார்க்காமல் உள்ளூரிலேயே வேலை பார்க்கும் வாய்ப்பினையும் இந்த குவாரிகள் தான் ஏற்படுத்தி தருவதாக கூறி இந்த திட்டத்திற்கு அனுமதி வழங்குமாறும் கூறினார்.

6. <u>திரு. முத்துராமலிங்கம், த/பெ. சக்திவேல், நதிக்குடி</u>

திரு. முத்துராமலிங்கம் அவர்கள், ஏற்கனவே புல எண்.917/2-ல் ஓடை அமைந்துள்ளதாகவும் புல எண்.918/2,3-ல் ஏற்கனவே குவாரி செய்து வருவதாகவும் மற்றும் புல எண்.914/4A-ல் மணல் எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளர். மேலும், இத்திட்டத்தின் உரிமையாளர் ஏற்கனவே சொந்த பயன்பாட்டிற்காக அவர்களுக்கு கிரசர்களுக்கு கனரக வாகனங்கள் செல்வதற்கு ஒரு கிலோ மீட்டர் வரை பாதை அமைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், ஏற்கனவே புல எண்.887-ல் பங்கர் (Bunker) போட்டு கிரசர் நிறுவியுள்ளதாகவும் மற்றும் புல எண். 808/3-ல் அமைந்திருந்த ஓடையை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். புல எண்.915/2-ல் கிராவல் குவாரி ஏற்கனவே அமைந்துள்ளதாகவும், ஆனால் தற்பொழுது தான் இந்த புல எண்ணிற்கு அனுமதி கேட்கின்றனர் என தனது கருத்தினை தெரிவித்தார்.

7. <u>திரு. ராஜதுரை, வழக்கறிஞர், நதிக்குடி.</u>

திரு. ராஜதுரை அவர்கள், இது போன்ற திட்டங்கள் அமைவதினால் சுற்றுச்சூழலிற்கும் பொதுமக்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது மற்றும் இது போன்ற குவாரிகள் அமைந்துள்ள பகுதிகளை சென்று பார்த்தால் அந்த சாலையானது கல்குவாரி உரிமையாளருக்கும் வாகன ஓட்டிகளுக்கும் மட்டுமே சொந்தமாக

உள்ளதாகவும் தெரிவித்தார். இவ்வாறு கனரக வாகனங்கள் செல்வதால் அதிக தூசு ஏற்படுவதாகவும் மற்றும் உடைகற்களை ஏற்றி செல்லும் கனரக வாகனங்கள் முறையாக பாதுகாப்பின்றி செல்வதாகவும் இதனால் அதிக பாதிப்பு ஏற்படுவதாகவும் தெரிவித்தார். எனவே, முறையான பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் உடைகற்களை ஏற்றி சென்று சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாமல் இயக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். இதனை மீறுவோர் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், குவாரிகள் அதிக அளவு வெடி போடுவதாகவும் அரசு நிர்ணயித்த அளவு தான் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்ட குவாரிகள் அனைத்தும் உடைகற்களை எடுக்கின்றனவா என சர்வே செய்து அறிக்கை தருமாறு கேட்டுக்கொண்டார்.

8. <u>திரு. பாலமுருகன், நதிக்குடி.</u>

திரு. பாலமுருகன் அவர்கள், இரவு நேரங்களில் 12 மணி அளவில் வெடி போடுவதால் அருகில் உள்ள அவரது வீட்டிற்கு பாதிப்பு ஏற்படுவதாகவும், இதனால் இத்திட்டத்திற்கு அனுமதி வழங்க வேண்டாம் என கேட்டுக்கொண்டார்.

9. <u>திருமதி. கனகலட்சுமி, க/பெ. முத்துராமலிங்கம், நதிக்குடி.</u>

திருமதி. கனகலட்சுமி அவர்கள், இத்திட்டம் அமைவது தொடர்பாக விளம்பரத்தினை ஒரு வாரத்திற்கு முன்பே தெரிவித்தால் நிறைய ஊர் மக்கள் வந்திருப்பார்கள் எனவும், மேலும் இக்கூட்டத்தினை நதிக்குடி பஞ்சாயத்தில் நடத்துமாறும் கோரிக்கை வைத்தார். மேலும், அதிக அளவு சத்தத்துடன் வெடி போடுவதால் பூமி அதிர்வு ஏற்படுகிறது இதனால் அருகில் உள்ள வீடுகளின் சுவர்களில் விரிசல் ஏற்படுவதாகவும் கூறினார். மேலும், குழந்தைகளுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும், தூசு அதிக அளவு வருவதால் விவசாய நிலம் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்தார். ஏற்கனவே இவர்களின் குவாரிக்கு அனுமதி கொடுத்ததால் விவசாய நிலம் பாதிக்கப்பட்டு தற்பொழுது விவசாயம் செய்யமுடியாத சூழல் இருப்பதாகவும் கூறினார். இதனால் இந்த குவாரிக்கு அனுமதி வழங்கவேண்டாம் எனவும் தெரிவித்தார்.

10. **திரு. மாரிமுத்து, த/பெ. செல்லையா, நதிக்குடி**

திரு. மாரிமுத்து அவர்கள், இது போன்ற திட்டங்கள் வருவதால் முதலாளியும் வாழ வேண்டும் தொழிலாளியும் வாழ வேண்டும். ஆனால் அதற்கு ஒரு நியாயம் வேண்டும் என தனது கருத்தினை ஆரம்பித்தார். அவரது ஊரில் குவாரி அமைப்பதற்கான கருத்து கேட்பு கூட்டத்தினை பக்கத்து தாலுகாவில் நடத்துவது நியாமா என வினவினார்? சம்மந்தப்பட்ட ஊரில் கருத்து கேட்பு கூட்டத்தினை நடத்தினால் பொதுமக்கள் அனைவரும் அவரவர் கருத்தினை தெரிவிக்க இயலும் என கூறினார். இதனால் இந்த கருத்து கேட்பு கூட்டத்தினை ரத்து செய்யுமாறும் கேட்டுக்கொண்டார். விளக்க காட்சிகளை விவரிக்கும்பொழுது அதை கதை மூலமாக விளக்கவேண்டும் எனவும் தெரிவித்தார். எனவே இக்கூட்டத்தினை ரத்து செய்து நதிக்குடி கிராமத்தில் கருத்துக்கேட்பு கூட்டத்தினை நடத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

11. **திரு.அசோகன், த/பெ. அழகர்சாமி, காக்கிவாடன்பட்டி**

திரு. அசோகன் அவர்கள், இதுபோன்ற குவாரிகள் அமைவதால் 2013-ல் இருந்தே பாதை மற்றும் ஓடை பிரச்சனை வருவதாகவும் அதனை சரிசெய்ய இதுநாள் வரை வழிவகை செய்தீர்களா எனக் கேட்டார். 24.12.2023 அன்று கனிமவளத்துறைக்கு மனு கொடுத்ததாகவும் அதற்கு கிடைக்கப்பெற்ற பதில் திருப்திகரமாக இல்லை என்றும், மேலும் புல எண்கள். 845, 847-ல் பாதையை ஆக்கிரமிப்பு செய்த பாதையை மீட்டெடுக்க இதுநாள் வரை எந்த வழிவகையும் செய்யவில்லை. இருந்தபோதிலும், இந்த குவாரி அமைவதற்கு எந்தவித ஆட்சேபனை இல்லை என்றும், அருகிலுள்ள விவசாய நிலங்களுக்கு பாதை விட்டு குவாரி அமைக்குமாறும் கேட்டுக்கொண்டார். கனிமவள நிதியிலிருந்து கிணற்றில் உள்ள தண்ணீரை உறிந்து செங்குளம் கண்மாயில் விடுவதற்கு வழிவகை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

12. **திரு.A.நாராயணபெருமாள்சாமி, தமிழ்நாடு குவாரி குத்தகைதாரர் சங்க மாநில செயலாளர்,**

திரு. A.நாராயணபெருமாள்சாமி அவர்கள், இந்த திட்டமானது அரசு நிலத்தில் அமையவில்லை என்றும், பட்டா நிலத்தில் தான் அமைய போகிறது எனவும், அதனால்

அனுமதி அளிக்கலாம் எனவும், பாதை பிரச்சனைகள் மற்றும் ஓடை பிரச்சனைகள் அதனை அதிகாரிகள் சரிசெய்ய வேண்டும் எனவம் தெரிவித்தார். மேலும் இதுபோன்ற திட்டங்கள் அமைந்தால் தான் நாடு செழிப்பாக இருக்கும் என்றும், இந்த திட்டம் அமைவதற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பாக கருத்துக்கூற வேறுயாரும் முன்வராததால், வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர் அவர்கள், மேலும் கருத்துகள் ஏதும் இருக்கிறதா என்று வினவினார். அதன் பின்பும் பொதுமக்களிடமிருந்து கருத்துகள் ஏதும் வரவில்லை. இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் இதுவரை நடந்ததை தொகுத்துக் கூறி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த வீடியோ அடங்கிய குறுந்தகடு மற்றும் எழுத்துபூர்வமான கூட்ட நடவடிக்கைகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு பரிசீலினை செய்யும் பொருட்டு அனுப்பிவைக்கப்படும் எனவும், மேலும், எழுத்துப் பூர்வமான கருத்துக்கள்/மனுக்கள் ஏதும் இருப்பினும் வழங்கலாம் எனத் தெரிவித்தார்.

| | | |
|---|---|---|
| எழுத்துப்பூர்வமாக பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | - | 54 |
| உத்தேசிக்கப்பட்ட குவாரிக்கு ஆதரவாக பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | - | 12 |
| உத்தேசிக்கப்பட்ட குவாரிக்கு எதிராக பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | - | 42 |

அத்துடன் பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் நிறைவுபெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர்.

வருவாய் கோட்டாட்சியர்,
சாத்தூர்,
விருதுநகர் மாவட்டம்.

இணைப்புகள்:

1. வருகைப்பதிவேடு நகல் (மொத்தம் - 08 பக்கங்கள், 82 நபர்கள்)
2. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).